අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education
'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112784846
isurupaya@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. } ED/03/56/03/03 ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. } දිනය / திகதி / Date } 2022.05.

Translation

சகல அதிபர்களுக்கும்,

**"பாடசாலை ஆராய்ச்சி வாரம்" செயற்றிட்டம்**

மேற்படி விடயம் தொடர்பான எனது சம இலக்கம் மற்றும் 2022.05.05 ஆம் திகதிய கடிதம் சார்பானதாகும்

02. அக்கடிதத்தில் தெரிவித்துள்ளபடி ' பாடசாலை ஆராய்ச்சி வாரம்' செயற்றிட்டம், 2022 மே மாதம் 17 முதல் 20 வரையில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தாலும் அவ்வாரத்திற்குள் உரிய செயற்றிட்டத்தை அமுல்படுத்துவதற்கு முடியாமல் போகுமிடத்து மீண்டும் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும் ஜுன் மாதம் 06 ஆம் திகதி தொடங்கும் வாரத்தில் இந்த செயற்றிட்டத்தை செயல்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தயவுடன் அறியத்தருகின்றேன்.

03. மேலும், உரிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்றாவது தொகுதி அதாவது, சிரேஷ்ட இரண்டாம் நிலைப் பிரிவிற்குரிய நிகழ்ச்சித்திட்டமான 'ஆராய்ச்சி கருத்திட்டமொன்றை செயல்படுத்துதல்' தொடர்பாக மாணவர்களை அறிவுறுத்தும் செயற்றிட்டமொன்று 2022 மே 24 ஆம் திகதி இணையவழி ஊடாக மேற்கொள்ளப்பட்டது. அந்த இணையவழி அறிவுறுத்தலின் வீடியோ மற்றும் சமர்ப்பிக்கப்பட்டவைகளின் மென் பிரதிகள் மற்றும் செயற்றிட்டம் தொடர்பான அனைத்து தகவல்களும் கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் (www.moe.gov.lk) விசேட அறிவித்தலின் (Special Notices) கீழ் வெளியிடப்பட்டிருப்பதுடன் இந்த அனைத்து தகவல்களும் மாகாண மற்றும் வலய ஆராய்ச்சி ஒருங்கிணைப்பாளர்களுக்கும் மின்னஞ்சல் மற்றும் Whatsapp மூலமாக முன்னிலைப்படுத்தப்படும்.

04. மேற்படி இணையவழி அறிவுறுத்தல் செயற்றிட்டம் தொடர்பாக கலந்துகொண்ட மாணவர்களின் மற்றும் ஆசிரியர்களின் கோரிக்கைக்மைவாக பாடசாலை மீண்டும் ஆரம்பிக்கும் திகதியை கருத்திற்கொண்டு ஆராய்ச்சி முன்மொழிவினை கையளிக்கும் இறுதி தினத்தை பின்வருமாறு திருத்தப்படும் என்பதனை மேலும் தயவுடன் அறியத்தருகின்றேன்.

- பாடசாலை மட்டத்தின் ஆராய்ச்சி முன்மொழிவை கையளிக்க வேண்டிய இறுதி தினம் - 2022 ஜுன் 13
- வலய மட்டத்தின் ஆராய்ச்சி முன்மொழிவை கையளிக்க வேண்டிய இறுதி தினம் - 2022 ஜுன் 23
- மாகாண மட்டத்தின் ஆராய்ச்சி முன்மொழிவை கையளிக்க வேண்டிய இறுதி தினம் - 2022 ஜுன் 30

05. மேலும், ஆராய்ச்சி முன்மொழிவை தயாரிப்பதற்கு மேலதிக உதவிகள் தேவையெனில், வலய மற்றும் ஆராய்ச்சி விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் மூலமாக இந்த கிளைக்கு அறிவிக்கும்படி தெரிவிப்பதுடன், இந்த செயற்றிட்டத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்வதற்காக நீங்கள் வழங்கும் ஒத்துழைப்பை பெரிதும் பாராட்டுகின்றேன். (மாகாண மற்றும் வலய ஆராய்ச்சி ஒருங்கிணைப்பாளர்களை தொடர்பு கொள்ளும் தொலைபேசி எண்கள் உள்ளடங்கிய ஆவணமொன்று இணைப்பு இலக்கம் 01 இன் மூலமாகவும் பாடசாலை மற்றும் வலய மட்ட மதிப்பீடுகளை மேற்கொண்ட பின்னர் மாணவர்களுக்கு வழங்கப்படவேண்டிய சான்றிதழுக்குரிய மாதிரி இணைப்பு 02 இன் மூலமாகவும் முன்வைக்கின்றேன்)

**உதார டீ திக்கும்புர**
கல்விப் பணிப்பாளர் (ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி))
கல்விச் செயலாளருக்காக

பிரதிகள்:
1. மாகாணக் கல்விப் பணிப்பாளர் - த.அ.கொ
2. வலயக் கல்விப் பணிப்பாளர் - த.அ.கொ
3. மாகாண / வலய ஆராய்ச்சி ஒருங்கிணைப்பாளர் - த.அ.கொ ம. தே.ந.எ.

ගරු අමාත්‍යතුමා / கௌரவ அமைச்சர் / Hon. Minister } +94112784832 +94112784825 education@moe.gov.lk
ලේකම් / செயலாளர் / Secretary } +94112784811 +94112785162 secretary.education@moe.gov.lk